# பாட்டாளி சிந்தனை

Volume 34 No 3

November 2023

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

SUCI (Communist)

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5

# மாபெரும் நவம்பர் புரட்சி நீடூழி வாழ்க!



மனித இன வரலாற்றில் நடைபெற்ற புரட்சிகள் யாவும் மைல்கற்கலாகும். அவற்றில் தனிச்சிறப்பு பெற்றது, பாட்டாளிவர்க்கத்தின் மாபெரும் தலைவருமாகிய மார்க்ஸ் மற்றும் எங்கல்ஸ்ஸின் மதிப்பு மிக்க மாணாக்கருமாகிய தோழர் விளாடிமிர் இலியிச் லெனின் அவர்கள் 1917ல் நடத்திய ரஷ்யாவின் மாபெரும் நவம்பர் புரட்சியாகும். காரணம், காலம் காலமாக அவமதிக்கப்பட்டு சுரண்டலுக்குட்பட்டு அல்லற்பட்டுக் கொண்டிருந்த மக்களை சுரண்டலிலிருந்து விடுவித்ததை கட்டியம் கூறியதன் மூலம் இப்புரட்சியானது பிறவற்றிலிருந்து மிகவும் மாறுபட்டிருப்பதுதான் ஆகும்.

ரஷ்யாவில் முதல் சோசலிச அரசை நிறுவிய மாபெரும் நவம்பர் புரட்சியானது திடீரென தானாக நடந்த ஒன்றல்ல. இப்புரட்சியானது, ஒரு புரட்சிகர கருத்தியலை நடைமுறையாக்க முடியும் என்பதற்கான ஒரு தனித்தன்மை வாய்ந்த உதாரணமாகும். எண்ணிப்பார்த்திட முடியாத அளவிற்கு பின்தங்கியிருந்த ரஷ்யா போன்ற நாட்டை இருபதே ஆண்டுகளில் ஒவ்வொரு அம்சத்திலும் அப்புரட்சியை நிறைவேற்றி முன்னேற்றத்தை காண்பித்தது. லெனினது மதிப்புமிக்க மாணவரான மாபெரும் தலைவர் ஸ்டாலின் அவர்களின் சரியான தலைமையில் சோவியத் யூனியன், ஹிட்லரின் ஃபாசிசத்திற்குப் படுதோல்வியை ஏற்படுத்தி, வரவிருந்த ஆபத்திலிருந்து மனித இனத்தை பாதுகாத்து, போரினால் பாதிக்கப்பட்டிருந்த

தொடர்ச்சி 3ம் பக்கம்

# தோழர் மணிக் முகர்ஜிக்கு செவ்வணக்கம்!



எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மூத்த பொலிட்பீரோ உறுப்பினரும் வாழ்நாள் முழுவதும் புரட்சியாளருமான தோழர் மணிக் முகர்ஜி அவர்கள் 16–10–23 அன்று மறைந்தார். ஆழ்ந்த வேதனையுடன் அன்னாருக்கு இரங்கல் தெரிவிப்பதற்காக கட்சியின் மத்திய கமிட்டி நினைவுக் கூட்டம் அக்டோபர் 26ந்தேதி நடத்தியது. தோழர் மணிக் முகர்ஜியின் வாழ்க்கை, புரட்சிக்கான அவரது அயராத உழைப்பு, பங்களிப்பு ஆகியவற்றை அக்கூட்டத்தில் இரங்கல் செய்தியாக முன்வைக்கப்பட்டது. அதனை இங்கே வழங்குகிறோம்.

நமது கட்சியின் காலம் சென்ற ஸ்தாபகப் பொதுச் செயலாளர் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் உற்ற தோழரான தோழர் நிஹார் முகர்ஜி அவர்கள் மூலம் தோழர் மணிக் முகர்ஜி அவர்கள் நமது கட்சிக்கு வந்தார்.

தொடர்ச்சி 2ம் பக்கம்

# யுத்தவெறி இஸ்ரேல் காஸா மீது விதித்துள்ள காட்டுமிராண்டித்தனமான பொருளாதாரத்தடைக்கும் பாலஸ்தீனம் மீதான அதன் போர்க்குற்றங்களுக்கும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கடும் கண்டனம்

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் அக்டோபர் 10, 2023 அன்று வெளியிட்ட அறிக்கை:*

ஏற்கெனவே முற்றுகையிடப்பட்டுள்ள காஸா மீது மீண்டும் முழுமையான பொருளாதாரத்தடை விதிக்கும் இஸ்ரேல் அரசாங்கத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். மேற்கு ஆசியாவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முன்னணி அலுவலகமாக செயல்படும் யூதவெறி இஸ்ரேல் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை உணவு, குடிநீர், எரிபொருள், மின்சாரம் ஆகியவற்றை முற்றிலும் தடை செய்கிறது, இதன்மூலம் விடுதலையை நோக்கிக் காத்திருக்கும் 23 லட்சம் பாலஸ்தீன மக்களை கொன்று குவிக்கத் திட்டமிட்டுள்ளது.




பாலஸ்தீனியர்களை "மிருக மனிதர்கள்" என்று கூறியுள்ள இஸ்ரேல் ராணுவ அமைச்சர் "நாங்கள் மனித மிருகங்களோடு போரிடுகிறோம், இது தொடக்கம்தான், ... மத்திய கிழக்கு பகுதியையே நாங்கள் மாற்றி அமைக்கப் போகிறோம்" என்று கூறியுள்ளார். சிறையிலிருந்த 4.6 லட்சம் யூத மக்களை ரத்தவெறி பிடித்த நாஜிக்கள் துப்பாக்கி குண்டுகளாலும் விஷவாயு செலுத்தியும் கொன்ற ஹிட்லரின் 'வார்ஷா கெட்டோ' நிகழ்வைப்போன்றே மக்களைக் கொல்ல திட்டமிட்டுள்ளதாகவும். மத்தியக் கிழக்கு பகுதியில் வசிப்பவர்களுக்கு இதுதான் நடக்கும் என்றும் எச்சரித்துள்ளார். பாலஸ்தீனத்தை பாலைவனமாக ஆக்கிவிடுவோம் என்று இஸ்ரேல் பிரதமர் மிரட்டினார். இவ்வாறு, காட்டு மிராண்டித்தனமான பொருளாதாரத் தடை

தொடர்ச்சி 8ம் பக்கம்

# தோழர் மணிக் முகர்ஜிக்கு செவ்வணக்கம் . . .

*1ம் பக்கத் தொடர்ச்சி*

தோழர் நிஹார் முகர்ஜி அவர்களின் குடும்பம் ஒரு கூட்டுக் குடும்பம். தோழர் மணிக் முகர்ஜி தோழர் நிஹார் முகர்ஜி அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரர் ஆவார். தோழர் மணிக் முகர்ஜி தனது *12* அல்லது *13*வது வயதில் டாக்காவில் தங்களது இல்லத்தில் முதல்முறையாக தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களை சந்தித்தார். பின்னர் அவரது குடும்பம் கொல்கத்தா வந்த போது தோழர் மணிக் முகர்ஜி அவர்களும் கொல்கத்தா வந்து விட்டார்.

தோழர் மணிக் முகர்ஜி தனது நீண்ட அரசியல் வாழ்வில் கட்சிக்காக பல முக்கியமான கடமைகளை ஆற்றியுள்ளார். தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் நேரடி பார்வையில் காம்சமோல் அமைப்பு உருவாக்கப்பட்டபோது அதனை வழி நடத்தும் பொறுப்பு தோழர் மணிக் முகர்ஜி அவர்களிடம் வழங்கப்பட்டது. உரிய கவனிப்புடன் அந்த கடமையை அவர் நிறைவேற்றினார். அதன் பிறகு புரட்சிகர நடவடிக்கைகளுக்காக மாணவர்களை ஒன்றிணைப்பதற்காக உருவாக்கப்பட்ட அன்றைய எஸ்யுசி எஸ்பி (கட்சியின் மாணவர் அமைப்பு)யில் பணியாற்றத் தொடங்கினார். தொடக்கத்தில், நமது கட்சியின் இன்றைய பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்களுடன் இணைந்து பணியாற்றினார். ஆனால் தோழர் மணிக் முகர்ஜி அவர்கள் இரண்டு முறை காச நோயாலும் அதன் பிறகு மஞ்சள் காமாலை நோயாலும் பாதிக்கப்பட்டதால் அதிலிருந்து மீண்டு வரும்வரை அவரால் கட்சிப்பணி ஆற்றமுடியவில்லை.

*1963*ல் அறிவுஜீவிகளை ஒருங்கிணைத்து ஒரு கலாச்சார அமைப்பை கட்டி எழுப்பும் பொறுப்பை தோழர் மணிக் முகர்ஜி வசம் தோழர் சிப்தாஸ் கோஷ் வழங்கினார். தொடக்கத்தில் இரண்டு தோழர்களுடன் சேர்ந்து வங்கமொழியில் "பதிக்ரீத்" என்ற மாதம் இருமுறை வரக்கூடிய கலாச்சார இதழை தொடங்கினார். பதிக்ரீத் ஆசிரியராக தோழர் மணிக் முகர்ஜி தேர்வு செய்யப்பட்டார். அதன் பிறகு ஒரு நாடகப் பிரிவு, ஒரு இசைக்குழு ஆகியவற்றை சேர்த்து பதிக்ரீத் கலாச்சார அமைப்பு உருவாக்கப்பட்டது. தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் வழிகாட்டுதலின்படி தோழர் மணிக் முகர்ஜி இலக்கிய உலகம் கலைத்துறை ஆகியவை பற்றி உள்ள பல்வேறு சிந்தனைகள் குறித்து ஆழமான பகுத்தாய்வை வழங்கியதோடு "முற்போக்கு வாதம்" என்ற போர்வையில் கலை, இலக்கிய, கலாச்சாரம் ஆகிய துறைகளில் பிற்போக்கு வாதம் உருவாகி வருவதையும் அம்பலப்படுத்தினார். இந்த செயல்முறை போக்கில் கலாச்சார துறையில் நன்கு அறியப்பட்ட ஒருவராக அவர் உருவானார்.

*1975–76*ல் மாபெரும் இலக்கியவாதி சரத் சந்திரரின் பிறந்த நூற்றாண்டை அனுஷ்டிக்க கட்சி முடிவு செய்தது. கலை இலக்கியத் துறைகளில் உள்ள புகழ்பெற்ற மனிதர்களை கொண்ட ஒரு பொதுமக்கள் கமிட்டியை வெற்றிகரமாக அவர் உருவாக்கினார் அதன் பொதுச்செயலாளராகவும் அவர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். பதிக்ரீத் ஏற்பாடு செய்த சரத் சந்திரரின் பிறந்த நூற்றாண்டு கூட்டங்கள் பலவற்றில் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்த உரைகளில் இருந்து பல குறிப்புகள் எடுக்கப்பட்டு சிறு புத்தகம் ஒன்றும் நூற்றாண்டு கொண்டாட்டத்தின் போது வெளியிடப்பட்டது.

பின்னர் அந்த கமிட்டியின் சார்பில் "கோல்டன் புக் ஆஃப் சரத்சந்திரா" என்ற புத்தகம் இரண்டு மொழிகளில் வெளியிடப்பட்டது. புத்தகத்தின் தலைமை ஆசிரியராக தோழர் மணிக் முகர்ஜி அற்புதமான பணியை ஆற்றி இருந்தார். அதன் பிறகு ஹிந்தி மற்றும் இதர மொழிகளின் முன்னணி இலக்கியவாதிகளை உள்ளடக்கிய "அகில இந்திய சரத்சந்திரர் நூற்றாண்டு கமிட்டி" ஒன்றையும் வெற்றிகரமாக தோழர் மணிக் முகர்ஜி உருவாக்கினார். "பிரேம்சந்த் நூற்றாண்டு கமிட்டியின்" பொதுச் செயலாளராகவும் தோழர் மணிக் முகர்ஜி தேர்ந்தெடுக்கப்பட்டார். ஈஸ்வர சந்திர வித்யாசாகரின் இறந்த நூற்றாண்டின் போது தோழர் மணிக் முகர்ஜி அவர்கள் எழுதிய "கோல்டன் புக் ஆஃப் வித்யாசாகர்" என்ற புத்தகமும் வெளியிடப்பட்டது.




**கொல்கத்தாவில் தோழர் மணிக் முகர்ஜி அஞ்சலிக் கூட்டம்**

மேற்கு வங்கத்தில், *1980*களின் தொடக்கத்தில், அன்றைய சிபிஐ(எம்) தலைமையிலான இடது முன்னணி அரசாங்கம் தொடக்கக் கல்வியில் ஆங்கில மொழி போதிப்பதை நிறுத்துவதற்கும் பாஸ் பெயில் முறையை நீக்குவதற்கும் கல்வி நிலையங்களின் தன்னாட்சி உரிமையை பறிப்பதற்கும் முடிவு செய்தது. கல்வி குறித்த தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் போதனைகளின் அடிப்படையில் மேற்கு வங்கத்தின் புகழ்பெற்ற அறிவு ஜீவிகள், வரலாற்று அறிஞர்கள், கல்வியாளர்கள், விஞ்ஞானிகள், இலக்கியவாதிகள், பத்திரிகையாளர்கள், இதர பிரிவு சாமானிய மக்கள் ஆகியோரை கொண்ட வரலாற்று சிறப்புமிக்க இயக்கம் வளர்த்தெடுக்கப்பட்டது. "சிக்ஷா சங்கோச்சன் விரோதி மற்றும் ஸ்வாதிகார் ரக்ஷா கமிட்டி" (கல்வியை சுருங்குவதை எதிர்க்கும், சுய உரிமை பாதுகாப்பு கமிட்டி) என்ற ஒரு பொதுமக்கள் கமிட்டி ஏற்படுத்தப்பட்டது அதன் பிரதான அமைப்பாளராக தோழர் மணிக் முகர்ஜி செயல்பட்டார். இந்த கமிட்டியின் தலைமையில் *19* ஆண்டுகாலம் நீண்ட நெடிய போராட்டம் நடத்தப்பட்டது. இறுதியில் சிபிஐ(எம்) அரசாங்கம் பணிந்தது. தொடக்கக் கல்வி முதல் ஆங்கிலம் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது.

*1990*இல் வேதனைக்குரிய வகையில் சோசலிச முகாம் வீழ்ந்த பின்பு பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்டுகளை ஒருங்கிணைத்து போர் எதிர்ப்பு அமைதிக்கான இயக்கத்தை முன்னெடுப்பது என்று தோழர் நிஹார் முகர்ஜி அவர்களின் தலைமையில் இயங்கிய நமது கட்சி முடிவு செய்தது. இதற்காக பல்வேறு நாடுகளிலும் சென்று வாய்ப்புகளை தேடும் பொறுப்பு தோழர் மணிக் முகர்ஜி வசம் வழங்கப்பட்டது. இந்த முயற்சியால் *1995*இல் ஏகாதிபத்திய எதிர்ப்பு சர்வதேச மாநாடு கொல்கத்தாவில் நடத்தப்பட்டது. அதில் அமெரிக்கா, ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ், சைரே, துருக்கி, பங்களாதேஷ், ஸ்ரீலங்கா, நேபாளம், இன்னும் பல நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் நமது நாடு முழுவதும் பல மாநிலங்களில் இருந்து பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அதன் பிறகு இதே போன்ற நான்கு மாநாடுகள் *1997, 2003, 2005, 2007* ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்டன. *2007*இல் கொல்கத்தாவில் நடைபெற்ற மாநாட்டில் "ஏகாதிபத்தியத்திற்கு எதிரான சர்வதேச ஒருங்கிணைப்புக் கமிட்டி" ஏற்படுத்தப்பட்டது, அதன் தலைவராக அமெரிக்காவின் முன்னாள் அட்டெர்னி ஜெனரல் ராம்சே கிளார்க் அவர்களும் பொதுச் செயலாளராக தோழர் மணிக் முகர்ஜி அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கட்சியையும் தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனையையும் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் தோழர் மணிக் முகர்ஜி கொண்டு சென்றார். அவரது ஞானம், புலமை, கனிவான இயல்பு ஆகியவை பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அறிவுஜீவிகளையும் பல்வேறு நிபுணர்களையும் ஈர்த்தது.

*1988*ல் நடைபெற்ற முதல் கட்சி காங்கிரஸில் தோழர் மணிக் முகர்ஜி ஸ்டாப் உறுப்பினராகவும் கொல்கத்தா மாவட்ட செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்கு முன்பு அவர் மேற்கு வங்க மாநில தலைமைக் குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். கட்சியின் வங்க மொழி பத்திரிகையான கணதாபியின் ஆசிரியராகவும் அவர் இருந்தார்.

*2009*இல் நடைபெற்ற இரண்டாவது கட்சி காங்கிரஸில் மத்திய கமிட்டி உறுப்பினராகவும், பொலிட்பீரோ உறுப்பினராகவும், மத்திய ஆசிரியர் குழுவிற்கும் தோழர் மணிக் முகர்ஜி தேர்வு செய்யப்பட்டார். *2018*இல் நடைபெற்ற மூன்றாவது கட்சி காங்கிரஸில் மத்திய கமிட்டி உறுப்பினராகவும் பொலிட்பீரோ உறுப்பினராகவும் அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது இறுதி மூச்சு வரை தனது அனைத்து பொறுப்புகளையும் அவர் நிறைவேற்றினார். தோழர் மணிக் முகர்ஜி மிகவும் அன்பானவர். பாடுபடும் மக்கள் மீது அவர் ஆழ்ந்த அன்பு வைத்திருந்தார். அவரோடு தொடர்பு கொள்ளும் எவர் ஒருவரையும் ஆழமாக ஈர்த்தார்.

தோழர் மணிக் முகர்ஜி அவர்களின் புரட்சிகர குணம்சத்தையும் பொதுமக்கள் மற்றும் கட்சியின் நலனுக்காக அவர் புரிந்த அளப்பரிய சேவைகளையும் இந்தக் கூட்டம் மிகுந்த மரியாதையுடன் நினைவு கூறுகிறது. பார்க்கின்சன் நோயால் அவர் பாதிக்கப்பட்டு அவர் எங்கும் செல்ல முடியாத நிலை ஏற்பட்ட போதிலும்கூட அவருடைய உத்வேகமும் சிந்தனையோ கொஞ்சமும் குறையவில்லை. அவரது மறைவு நாடு முழுவதும் உள்ள சுரண்டப்படும் மக்களுக்கு பேரிழப்பாகும். அவருடைய அளப்பரிய பணிகளும் அர்ப்பணிப்பும் புரட்சிகர இயக்கத்தை கட்டி எழுப்பும் பணியில் ஈடுபட்டிருக்க கூடிய அனைவருக்கும் நிச்சயமாக உத்வேகமூட்டும் ■

**தோழர் மணிக் முகர்ஜி அவர்களுக்கு செவ்வணக்கம்!**



**கொல்கத்தாவில் தோழர் மணிக் முகர்ஜிக்கு இளம் கம்யூனிஸ்டுகள் அஞ்சலி**

## மாபெரும் நவம்பர் புரட்சி நீடூழி வாழ்க

# பாட்டாளி வர்க்கக் கட்சியை, ஒரே கருத்துடைய, மனித உடலைப் போன்று பல அங்கங்கள் இருந்தாலும் ஒரே சிந்தனை கொண்ட அமைப்பாக லெனின் உருவாக்கினார்

1ம் பக்கத் தொடர்ச்சி

விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு பெருமளவிலான நிவாரணங்களை கொண்டு வந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, அது கண்ணியமான மற்றும் கௌரவமிக்க வாழ்வினை அவர்களுக்கு அளித்தது. நவம்பர் புரட்சியின் வரலாற்றுச் சுருக்கத்தை தற்போது காண்போம்.


### புரட்சிக்கு முந்தைய இரஷ்யா

கொடுங்கோலன் ஜார் அரசாட்சியின் கீழ், விவசாயத்தை பெரும்பான்மையாகக் கொண்டிருந்த இரஷ்யாவில் முதலாளித்துவமானது மெல்லமெல்ல வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது. மார்க்சிசமும்கூட, அங்கு ஊடுருவி இரஷ்யாவின் பாட்டாளி வர்க்கத்தை அவர்களின் சொந்த போராட்ட அமைப்புக்களைக் கட்டிட எழுச்சியூட்டியது. அப்பொழுது இரஷ்யாவில் நரோத்தினிக்குகள் என்ற குழுவினர், பயங்கர வாதத்தை துரிதப்படுத்தி தனி நபர்களை கொல்வதன் மூலம் ஜார் ஆட்சியை அழித்துவிட முடியும் என நினைத்தார்கள். பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர தலைமையையும் பாட்டாளி வர்க்கம் தனக்கான கட்சியை கொண்டிருப்பதின் அவசியத்தையும் மறுதலித்தார்கள். இருப்பினும் முதல் இரஷ்ய மார்க்சிய குழுவான 'உழைப்பின் விடுதலை' (Emancipation of labour) என்பது ஜெனீவாவில் 1883ல் ஜி வி பிளக்கனோவால் உருவாக்கப் பட்டது. பிளக்கனோவ் நரோத்தினிசத்திற்கெதிராக இருந்தபோதிலும், அவரது கருத்துக்கள் தனிநபர் தீவிரவாதத்துடன் ஒத்துப்போனது.

எனவே, மார்க்சிசத்தின் அடிப்படையில் அதனை வளர்த்தெடுத்திடும் கடமையானது லெனின் மீது விழுந்தது. வெறும் 18 வயதே நிரம்பிய ஒரு மாணவனாக இருந்தபோது, புரட்சிகர மாணவர் இயக்கத்தில் பங்கெடுத்த தற்காக லெனின் கைது செய்யப்பட்டு காசான் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றப் பட்டார். பின்னர் அவர் ஃபெடோ செயேவ் என்பவர் உருவாக்கிய ஒரு மார்க்சியவாதிகள் வட்டத்தில் இணைந்தார். அதன் பின்னர் அவர் சமாரா என்ற இடத்திற்கு இடம்பெயர்ந்த உடனேயே அங்கு முதல் மார்க்சிய வட்டத்தை ஏற்படுத்தினார். செயின்ட் பீட்டர்ஸ் பர்க் சென்று 1895ல் உழைக்கும் பல்வேறு மார்க்சிய வட்டங்களை ஒன்றிணைத்த உழைக்கும் வர்க்க விடுதலைக்கான போராட்ட அணி (League of Struggle for the Emancipation of Labour) என்ற ஒரு குழுவினை அமைத்து தொடர்ச்சியான வெகுஜன இயக்கங்களை கட்டியமைக்கத் துவங்கினார்.

1897ல் லெனின் அவர்கள் கைது செய்யப்பட்டு சைபீரியாவிற்கு நாடு கடத்தப்பட்டார். மார்ச் 1898ல் போலீசாரின் கண்காணிப்பை ஏமாற்றி ஒரு சில சமூக ஜனநாயக அமைப்புகளின் பிரதிநிதிகள் மின்ஸ்க் நகரத்தில் நடந்த முதல் மாநாட்டில் ஒன்றுகூடினர். அம்மாநாடு இரஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சியினை (ஆர்எஸ்டிஎல்பி Russian Social Democratic Labour Party) துவங்குவதென முடிவு செய்தது. லெனின் நாடு கடத்தப்பட்டிருந்ததால் அக்கட்சியானது துவக்கப்படவில்லை. இரஷ்யாவில் பரவிக்கிடக்கும் மார்க்சியக் குழுக்கள் மற்றும் அமைப்புக்களிடையே உயிரோட்டமான தொடர்பினை ஏற்படுத்த டிசம்பர் மாதம் 1900ல் நாடு திரும்பிய பின்னர், லெனின் அவர்கள் பிளக்கனோவுடன் ஒன்றிணைந்து இஸ்க்ராவின் (தீப்பொறி) முதல் பத்திரிகையை வெளியிட்டார்.

1903ஆம் ஆண்டு லண்டனில் கட்சியின் திட்டத்தை தீர்மானிக்க ஆர்எஸ்டிஎல்பியின் இரண்டாம் மாநாடு நடைபெற்றது. அதில் அறிவித்தது: உற்பத்தி சாதனங்களின் மீதான தனிநபர் உரிமையை ஒழிப்பதும் மனிதனை மனிதன் சுரண்டுவதையும் அத்துடன் இருக்கின்ற வர்க்கப் பிளவுகொண்ட சமுதாயத்தை முற்றிலும் ஒழித்துக்கட்டுவதும்தான் இலக்காகும். சுருங்கக் கூறின், கட்சியின் இறுதி இலக்கானது, முதலாளித்



துவத்தை தூக்கியெறிவதும் சோசலிசத்தை நிறுவுவதுமாகும்'.

கட்சியின் விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் குறித்து தீவிர கருத்து வேறுபாடுகள் அம்மாநாட்டில் தோன்றின. கட்சியில் எவர் உறுப்பினராயிருக்க முடியும் என்பதில் பிரதான வேறுபாடு ஏற்பட்டு இரு குழுக்கள் தோன்றின. லெனின் தலைமையிலான பெரும்பான்மை குழு போல்ஷவிக் என்றும் சிறுபான்மையாயிருந்தவர்கள் மென்ஷவிக் என்றும் அழைக்கப்பட்டனர். ஆரம்பத்தில் பிளக்கனோவ் லெனின் பக்கமிருந்தார். பின்னர் அவர் மென்ஷவிக்குகள் பக்கம் சென்றுவிட்டார்.

வேலைநிறுத்தத்தில் பங்கெடுக்கும் ஒவ்வொரு தனிநபரும் தன்னை ஒரு கட்சி உறுப்பினராக அவரே அறிவித்துக்கொள்ளும் உரிமை கொடுக்க வேண்டும் என்பது மென்ஷவிக்குகளின் கோரிக்கையாகும். தனிநபர்களுக்கு கட்சி மீதான மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும், போராட்டங்களில் ஈடுபடுவதால் அவர்களுக்கு கட்சி உறுப்பினர் தகுதி வழங்கியாக வேண்டும் என்றும் சிறுபான்மையினர் பெரும்பான்மையினருக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனும் கோட்பாட்டை நீக்கிட வேண்டும் என்றும் மென்ஷவிக்குகள் கூறினர். அவர்கள் மத்தியத்துவக் கொள்கைக்கு எதிராயிருந்தனர். இரஷ்யா அந்நேரத்தில் பூர்ஷ்வா(முதலாளித்துவ) – ஜனநாயகப் புரட்சியின் ஆரம்பக்கட்டத்தில் இருந்தது. மேலும் முதலாளித்துவ சிந்தனையாளர்கள், மீண்டும் மீண்டும் புரட்சிக்கு ஆதரவாகவும் கட்சிக்கு உதவிடவும் முன்வந்தனர். இக்காரணத்தினால் தான் மென்ஷவிக்குகள் அவர்களை கட்சியின் உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ள விரும்பினர். ஆனால் லெனின், பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரக் கட்சியை நிறுவ, ஒத்த கருத்துடைய, பல அங்கங்கள் இருந்தாலும் மனித உடலைப் போன்றதொரு ஒற்றை குணாம்சம் கொண்ட பாட்டாளி வர்க்க புரட்சிகரக் கட்சியை உருவாக்க விரும்பினார்.

### லெனின் தலைமையினான போல்ஷவிக்குகள் அறிக்கை

1. உழைக்கும் வர்க்கம் மற்றும் உழைக்கும் வர்க்கக் கட்சி ஆகிய இரண்டும் ஒன்றல்ல. உழைக்கும் வர்க்கத்தின் கட்சி என்பது, மார்க்சிச சித்தாந்தத்தை உள்வாங்கிக்கொண்ட வர்க்க விழிப்புணர்வு பெற்ற உழைக்கும் வர்க்கத்தின் முன்னணிப்படை (Detachment) பிரிவினராகும்.

2. கட்சி உழைக்கும் வர்க்கத்தின் ஸ்தாபன ரீதியிலான படைப்பிரிவாகும். அதே சமயம், உழைக்கும் வர்க்க ஸ்தாபனத்தின் அனைத்து வடிவங்களையும்விட மிக உயர்ந்த வடிவமாகும்.

3. 'பாட்டாளி வர்க்கத்திற்கு அதன் ஸ்தாபனத்தை (கட்சியைத்) தவிர வேறெந்த ஆயுதமுமில்லை'. எனவே, கட்சி உறுப்பினர்கள் கட்சியின் கீழான ஏதாகிலும் ஒரு ஸ்தபானத்தின் உறுப்பினராக இருந்தாக வேண்டும்.

4. சரியாகப் பணியாற்றிடவும், மக்களை ஒழுங்கமைவுடன் வழிநடத்திடவும், மத்தியத்துவக் கோட்பாடுகளின் அடிப்படையில் உழைக்கும் வர்க்கத்தின் கட்சி கட்டுப்பாடு வேண்டும். அதாவது, தலைமையென்பது கீழ்மட்ட அமைப்புகள் மேல்மட்ட அமைப்புகளுக்கு கீழ்படிந்து நடந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் இருந்திடல் வேண்டும். மேலும், அனைத்து மட்டத்திலான தலைவர்களும் தொண்டர்களும் கட்சியின் கட்டுப்பாட்டினை கடைபிடித்தாக வேண்டும்.

5. கட்சி எனப்படுவது உழைக்கும் வர்க்க அமைப்பின் மிக உயர்ந்த ஸ்தாபன வெளிப் பாடாகும். எனவே, கட்சிதான் பிற அனைத்து அமைப்புக்களையும் வழிநடத்த வேண்டும். எனவே கட்சியானது, உயர்ந்த சித்தாந்தத்தைக் கொண்டிருக்கும், வர்க்கப் போராட்ட விதிகளில், ஒழுங்கு முறைகளில் நன்கு பரிச்சயம் கொண்ட மற்றும் புரட்சிகர இயக்கத்தை நடத்தும் அனுபவம் கொண்ட உழைக்கும் வர்க்கத்தின் மிகவும் முன்னேறிய பிரிவினரைக் கொண்டு ஏற்படுத்தப் படவேண்டும்.

6. கட்சியானது மக்களுடனான தொடர்பை தொடர்ந்து பராமரித்துக் கொண்டிருக்க வேண்டியது முக்கியமானதாகும். இல்லையெனில், அது முன்னேறிச் செல்லவே முடியாது.

7. கட்சியானது சூழ்நிலைக்கேற்றவாறு அவைகளின் பின்னால் சென்றிட கட்சி ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. அது தன்னிச்சையான நிகழ்வுகளுக்கு வால் பிடிப்பதில் ஈடுபடாது. "ஒரு புரட்சிகர கருத்தியல் இன்றி புரட்சிகர இயக்கம் இருக்காது... மிகவும் முன்னேறிய கருத்தியலினால் வழிநடத்தப்படும் ஒரு கட்சியால் மட்டுமே முன்னணிப்படை போராளியின் பாத்திரத்தை, நிறைவேற்றிட முடியும்" "...தன்னிச்சையாக நடக்கும் உழைப்பாளர் இயக்கத்திற்கு தலை வணங்குவதானது, விழிப்புணர்வு பெற்ற வகையினரின் பாத்திரத்தையும் கட்சியின் பாத்திரத்தையும் சிறுமைப்படுத்துவதாகும். இதன் பொருள், அவர்கள் தொழிலாளர்கள் மத்தியில் பூர்ஷ்வா சித்தாந்தத்தின் செல்வாக்கினை பலப்படுத்துகின்றனர்" என லெனின் கூறினார்.

1900த்தில் லெனின் ஒரு உண்மையான மார்க்சியக் கட்சியை கட்டியமைப்பதற்கான பிரதானக் கடமையை விரித்துரைத்தார். கட்சியை உருவாக்கி ஸ்திரப்படுத்துவது என்பதன் பொருள், இரஷ்ய சமூக ஜனநாயகவாதிகள் மத்தியில் கருத்தொற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கட்டியமைப்பதாகும் என அவர் எழுதினார். தோழர் லெனின் அவர்களின் மதிப்புமிக்க மாணவரான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள், கருத்தொற்றுமை என லெனின் எதனை பொருள் படக் கூறினார் என்பதை விளக்கியிருக்கின்றார். அது, வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் மார்க்சிசத்தை பிரயோகிக்கும் போராட்டமே என்றும் அது மட்டுமே இந்த புரட்சிகரத் தத்துவத்தை சரியாக ஈர்த்துக்கொள்ள ஏதுவாக அமையும் எனவும் விளக்கினார். ஒரு நாட்டின் பருண்மையான சூழ்நிலையில் மார்க்சிசத்தை பருண்மைப்படுத்தும் போராட்டமே அது என்றும், அது பூர்ஷ்வா கலாச்சாரத்திற்கெதிரான கம்யூனிசக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் போராட்டமே என்றும் அது கட்சியில் கூட்டுத் தலைமையையும் ஜனநாயக மத்தியத்துவத்தையும் வளர்த்தெடுக்கும் போராட்டம் என்பதாகவுமே லெனின் அவர்கள் பொருள்படுத்தினார் என தோழர் சிப்தாஸ் கோஷ் விளக்கினார்.

தொடர்ந்து போல்ஷவிக்குகள் உழைக்கும் வர்க்கப் போராட்டங்களை முழு வேகத்துடன் கட்டத்துவங்கினர். 1904ல் இரஷ்ய– ஜப்பானிய போர் வெடித்தது. அப்போர், புரட்சிகர இயக்கத்தின்

தொடர்ச்சி 4ம் பக்கம்

## மாபெரும் நவம்பர் புரட்சி நீடூழி வாழ்க

# புரட்சியின் அடுத்த அலை நாளை, நாளை மறுநாள் அல்லது சில மாதங்களுக்குப் பின்னர் வீசுமா என்பது எண்ணற்ற அனுமானிக்க முடியாத சூழ்நிலைகளைச் சார்ந்தே இருக்கின்றது

*3ம் பக்கத் தொடர்ச்சி*

*பேரலையை முறியடித்து விடுமென ஜார் அரசாங்கம் எதிர்பார்த்தது. ஆனால் **1904**இல் – டிசம்பர் மாதம் போல்ஷவிக்குகள் பாகு எண்ணெய் வயலில் மிகப்பெரும் வேலை நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்தனர். அது, நாடு முழுவதிலும் எண்ணற்ற வேலை நிறுத்தங்களை தூண்டிவிட்டது. இவையாவும் நெருங்கிவரும் புரட்சியை முன்னறிவிக்கும் இடிமுழக்க கர்ஜனை போன்று இருந்தன.*

### 1905ல் நடந்த முதல் புரட்சிகர எழுச்சி

*மென்ஷவிக்குகள் ஜாரின் போர் நடவடிக்கைகளை ஆதரித்தது மட்டுமின்றி எதிலும் தலையிடாமலிருந்த சுதந்திர தாராளவாத முதலாளிகளை முழுவதுமாக சார்ந்திருந்தனர். ஆனால் லெனின் **1905**ல் நடந்த பூர்ஷ்வா ஜனநாயக எழுச்சியை ஒரு வேறுபட்ட கோணத்தில் பார்த்தார். உலக முதலாளித்துவம் ஏகாதிபத்திய நிலையை அடைந்த ஒரு காலகட்டத்தில்தான் இத்தகைய புரட்சியானது நடக்கும் என்பதை அவர் சுட்டிக்காண்பித்தார். அதனால்தான் அவர், பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிகளில் பாட்டாளி வர்க்கத்தின் பாத்திர மானது, அப்புரட்சிகளுக்குத் தலைமையேற்பது தான் என்று திட்டவட்டமாகக் கூறினார். மென்ஷவிக்குகள் சார்பாக பிளக்கனோவ் மக்கள் ஆயுதங்களை கையிலெடுப்பதை எதிர்த்தார். ஆனால் லெனின் தலைமையில் போல்ஷவிக்குகள் ஆயுதம் தாங்கிய புரட்சியின் மூலம் ஜார் ஆட்சியை அழித்தொழித்து ஒரு தற்காலிகப் புரட்சிகர அரசாங்கத்தை நிறுவிட விரும்பினார்கள். பிளக்கனோவின் இந்த நம்பிக்கை துரோகமானது, புரட்சிகர இயக்கங்கள் மீது கொடுமையான அடக்கு முறையை ஏவிட ஜார் அரசாங்கத்திற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியது. அதனால், புரட்சிகர எழுச்சியானது பின்வாங்க வேண்டியிருந்தது.*

*இரஷ்யாவின் இந்த முதல் புரட்சியானது வெற்றியடையவில்லை. ஆயினும் அது, உலகம் முழுவதிலும் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்களின் மீது மிகப்பெரும் செல்வாக்கை செலுத்தியது.*

***1905** முதல் **1907** வரை மீண்டும் புரட்சிகரப் போராட்டங்களை போல்ஷவிக்குகள் நடத்தினர். அதனால் ஜார் ஆட்சியின் ஒடுக்குமுறைக்கு ஆளாயினர். **1908**லிருந்து **1912** வரை இரஷ்ய புரட்சியாளர்களுக்கு மிகவும் கடினமான நேரமாக இருந்தது. ஜார் அரசாட்சியின் கீழிருந்த ஸ்டோலிபின் என்ற ஒரு மந்திரி ஆயிரக் கணக்கான புரட்சியாளர்களைத் தூக்குமேடைக்கு அனுப்பினார். இக்காலகட்டத்தில், கட்சி அமைப்புகளை சட்ட விரோதமானவை என்று சார் அரசாட்சி அறிவித்தது. எனவே கட்சி அமைப்புகளை பாதுகாத்திடவும் கட்சியை முடிந்த வரை பலப்படுத்திடவும் சட்டரீதியிலான வழி முறைகளை போல்ஷவிக்குகள் பயன்படுத்தினர். ஆனால் மென்ஷவிக்குகள் ஒட்டுமொத்தமாக போராட்டகளத்திலிருந்து வெளியேறினர். மாறிய சூழ்நிலையில் மார்க்சிசம் திருத்தியமைக்கப்பட வேண்டிய தேவை இருக்கின்றது என அறிவுஜீவிகள் கூறுவது ஒரு புதுப் பாணியாக இருந்தது. அவர்களுக்கெதிரான போரை தொடுப்பதற்குப் பதிலாக, பிளக்கனோவ் உள்ளிட்ட மென்ஷவிக்குகள் போராட்டக் களத்தைவிட்டு வெளியேறிவிட்டனர். எனவே மார்க்சிய உணர்வை வளர்த்தெடுத்திட வேண்டிய நிர்ப்பந்தமானது லெனின் அவர்களுக்கு ஏற்பட்டது. இச் சூழ்நிலையில் சித்தாந்தப் போராட்டத்தை நடத்தி, லெனின் தனது பிரசித்திபெற்ற 'பொருள்முதல்வாதமும் அனுபவவாத விமர்சனமும்' என்ற* (Materialism and Empirio-Criticism) *ஆய்வுக்கட்டுரையை எழுதினார்.*

*புரட்சி துவங்கியபின்பு புரட்சியாளராக மாறும் ஒருவர் ஒரு உண்மையான புரட்சியாளர் இல்லை என்பதையும், உண்மையில் பிற்போக்காளர்கள் கடும் தாக்குதல்களை தொடுத்துக்கொண்டிருக்கும் வேளையில், தாராளவாதிகளும் ஜனநாயக வாதிகளும் அதீத ஊசலாட்டத்திலிருக்கும் வேளையில், எவரொருவர் புரட்சிகரக் கோட்பாடுகள் மற்றும் கோஷங்களையும் தொடர்ந்து முன்னெடுத்து செல்கிறாரோ, அவரே ஒரு உண்மையான புரட்சியாளர் என்பதையும் லெனின் சுட்டிக்காண்பித்தார்.*

*"புரட்சியின் அடுத்த அலை நாளை, நாளை மறுநாள் அல்லது சில மாதங்களுக்குப் பின்னர் வீசுமா என்பது எண்ணற்ற அனுமானிக்க முடியாத சூழ்நிலைகளைச் சார்ந்தே இருக்கின்றது." "...மக்களின் புரட்சியானது, முன்கூட்டியே திட்டமிட்டு நடத்திட முடியாது . . . ஓர் எழுச்சியை தயார்படுத்துபவர்கள் வெகுஜனங்களிடையேயான செல்வாக்கு பெற்றிருந்தால், சூழ்நிலைகளை சரியாக யூகிக்கமுடிந்தால் அவ் எழுச்சியினை உறுதிப்படுத்திடலாம்." (தொகுப்பு நூல்கள்: தொகுதி **8**, பக்கம் **153**) இதுகுறித்து லெனின் அவர்களது மற்றுமொரு படிப்பினையை நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும்:*

### ஒரு புரட்சிகர சூழ்நிலையின் பொதுவான அறிகுறிகள்

***1)** எந்த மாற்றமுமில்லாமல் ஆளும் வர்க்கங்கள் தங்களின் ஆட்சியை பராமரித்திட முடியாமற் போகையில்; 'மேல்மட்ட வர்க்கத்தினர் மத்தியில்' ஏதோ ஒரு வடிவத்தில் ஒரு நெருக்கடி ஏற்படு கையில், ஆளும் வர்க்கங்களின் கொள்கையில் ஒரு நெருக்கடி ஏற்பட்டு, அது ஒரு பிளவிற்கு இட்டுச்சென்று, அதன்மூலம் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் அதிருப்தியும் சீற்றமும் வெடித்துக் கிளம்புகின்றது. ஒரு புரட்சி நடைபெறுவதற்கு வழக்கமாக 'கீழ்த்தட்டு வர்க்கங்கள் பழைய பாணியில் வாழ விரும்பாமலிருப்பது' போது மானதாக இருக்காது. அதற்கு, பழைய பாணியில் 'மேல்தட்டு வர்க்கங்களும்' வாழ முடியாமலிருப்பது அவசியம்.*

***2)** ஒடுக்கப்பட்ட மக்களின் துயரங்களும் தேவைகளும் வழக்கத்திற்கு மாறாக மேலும் கடுமையாகி வரும் சூழ்நிலை.*

***3)** மேற்கண்ட காரணங்களின் ஒரு விளைவாக 'அமைதி காலத்தில்' எவ்வித முறையீடும் இல்லாமல் தங்களையே கொள்ளையடித்திட அனுமதித்த, ஆனால் கொந்தளிப்பான காலத்தில் நெருக்கடியின் சூழ்நிலைகளினாலும் 'மேல்தட்டு வர்க்கம்' தாங்களாகவே வரலாற்று ரீதியிலான செயல்பாட்டில் தன்னிச்சையாக ஈர்க்கப்பட்ட தினாலும் வெகுஜனங்களின் செயல்பாடுகள் சமுதாயத்தில் கணிசமாக அதிகரிக்கும். தனிப்பட்ட குழுக்கள் மற்றும் கட்சிகள் மட்டுமின்றி, தனித்த வர்க்கங்களின் விருப்பத்திற்கு அப்பாற்பட்ட இத்தகைய புறவய மாற்றங்கள் நிகழாமல் ஒரு புரட்சி நடைபெற முடியாது என்பது பொதுவான விதியாகும். அத்தகைய புறவய மாற்றங்கள்தான் "ஒரு புரட்சிக்கான சூழ்நிலை" என சுருக்கமாகக் கூறப்படுகின்றது. (தொகுப்பு நூல்கள், தொகுதி **21**, பக்கங்கள் **213–214**)*

### போல்ஷவிக் கட்சி உருவாக்கப்பட்டது

*லெனினுக்கும் போல்ஷவிக்குகளுக்கும் எதிரானவர்களை ஒன்றிணைத்து 'ஆகஸ்ட் கூட்டணி' ஒன்றை **1912**ல் ட்ராட்ஸ்கி உருவாக்கினார். இத்தகைய கட்சிவிரோத சக்திகளுக்கு எதிராகப் போராடிய அதே வேளையில், அனைத்து போல்ஷ விக்குகளையும் ஒன்றிணைத்து ஒரு தனி கட்சியை உருவாக்கிட வேண்டியிருப்பதை போல்ஷ விக்குகள் உணர்ந்தார்கள். இந்த நோக்கத்துடன், ஆறாவது அனைத்து இரஷ்யர்களின் கட்சி மாநாடு **1912** ஜனவரி மாதம் பிராகில்* (Prague) *நடைபெற்றது. சந்தர்ப்பவாத மென்ஷவிக்கு களையும், பிறரையும் வெளியேற்றியதின் மூலம், ஆர்எஸ்டிஎல்பி* (RSDLP) *கட்சியானது ஒரு புதிய ஒற்றைத் தன்மை யுடைய* (Monolithic) *'போல்ஷவிக் கட்சி' என்றழைக்கப்படும் கட்சியாக மாற்றியமைக்கப்பட்டது.*

### முதல் உலகப்போரும், போல்ஷவிக் கட்சியும் புரட்சிகர இயக்கமும்

***19**ஆம் நூற்றாண்டின் இறுதியில், உலக முதலாளித்துவம் ஏகாதிபத்திய கட்டத்தை அடைந்து விட்டதென்று லெனின் சுட்டிக் காண்பித்தார். ஏகாதிபத்திய நாடுகளுக்கு புதிய புதிய சந்தைகளும், புதிய காலனிகளை ஆக்கிரமிப்பதும், மூலதன ஏற்றுமதிக்கான புதிய களங்களும் மற்றும் மூலப் பொருட்களை தேடுவதும் தேவைப்பட்டது. உலகச் சந்தையின் பங்கை யார் எவ்வளவு பெறுவது என்ற கடுமையான போராட்டத்தினால் ஏகாதிபத்தியப் போர் தவிர்க்கவியலாததாகிவிட்டது. இவ்வாறாகத் தான் முதல் உலகப் போர் துவங்கியது. இரஷ்யா, பிரான்ஸ், பெல்ஜியம் மற்றும் பிரிட்டிஷ் பேரரசு ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்துகொண்டு ஒரு முகாமை ஏற்படுத்திக் கொண்டன. இதனை எதிர்த்து ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி ஆகிய நாடுகள்ஒரு கூட்டணியை ஏற்படுத்திக்கொண்டன.*

*தத்தம் நாடுகளில் உள்ள முதலாளிகளின் லாபத்தை அதிகரித்திடுவதற்காக, தொழிலாளர்கள் ஒருவரையொருவர் சுட்டு வீழ்த்துவது ஒரு குற்றம் என உலகிலுள்ள தொழிலாளர்கள் அனைவரும் கருதுவது என்று **1912**ல் பாஸ்லேயில்* (Basle) *நடைபெற்ற **2**வது சர்வதேசிய மாநாட்டின் பிரகடனத்தின்படி, **2**வது சர்வதேசியத்தைச் சார்ந்த கட்சிகள் தொழிலாளர்களின் நலன்களுக்கு துரோகமிழைக்காமல், குரலெழுப்பும் தைரியமிருந்திருந்தால், போரானது இத்தகைய பயங்கரமான குணாம்சத்தை அடைந்திருக்காது. மேலும் உலக கம்யூனிஸ்ட் கட்சிகள் யாவும் பலனடைந்திருக்கும். ஆனால் போர் துவங்கிய வுடன், இப்பிரகடனத்தை கடைபிடிப்பதற்குப் பதிலாக, கிட்டத்தட்ட **2**வது சர்வதேசியத்தைச் சார்ந்த கட்சிகள் அனைத்தும் தேசியவெறிவாதத் திற்குப் பலியாகி தத்தமது நாட்டு முதலாளிகளுக்கு ஆதரவாக 'தந்தை நாட்டை பாதுகாப்புபோம்' எனும் கோஷங்களை எழுப்பிடத் துவங்கின. இதன் காரணமாக பின்னர் லெனின் அவர்கள், **2**வது சர்வதேசியத்தை கலைத்திட வேண்டியிருந்தது.*

*உலக கம்யூனிச இயக்கத்தை பீடித்திருக்கும் குழப்பங்களுக்கு எதிராக சமரசமற்ற போராட்டத்தை நடத்தி **1916**ல் லெனின் அவர்கள், ஏகாதிபத்தியம்– முதலாளித்துவத்தின் உச்சகட்டம் என்ற பிரசித்திபெற்ற நூலை எழுதினார். ஏகாதி பத்தியமும் பாட்டாளி வர்க்கப் புரட்சியுமான இக்காலகட்டத்தில்தான் ஒரு தனி முதலாளித்துவ நாட்டில் சோசலிசத்தை வெற்றிபெறச் செய்ய முடியுமென லெனின் தெளிவாகக் குறிப்பிட்டார். லெனின் இத்தகைய ஓர் மதிப்பீட்டியிலிருந்து, பல்வேறு நாடுகளின் பாட்டாளி வர்க்கம் தத்தம் தேசிய பூர்ஷ்வா வர்க்கத்திற்கெதிரான புரட்சியினை வெற்றியாக்க முடியுமென்பதை உணர்ந்துகொண்டனர். இந்த உணர்வானது, பல்வேறு நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தை உத்வேகப்படுத்தியது. பாட்டாளி வர்க்கப் புரட்சியே ஏகாதிபத்தியப் போருக்கு முடிவுகட்டி, ஏகாதிபத்திய ஆட்சியை வேரறுப்பதின் மூலம் யதார்த்தத்தில் அமைதியை நிறுவிட முடியும் என்று அவர்கள் கூறினர்.*

### பிப்ரவரி புரட்சியும் ஜாரின் வீழ்ச்சியும்

***1917**ஆம் ஆண்டின் துவக்கத்திலிருந்தே, நாடு தழுவிய வேலைநிறுத்தம் ரஷ்யாவில் நடை பெற்றது. பிப்ரவரி– **14**ல் டூமா (நாடாளுமன்ற) அமர்வின் தொடக்க நாள் ஆகும். டூமாவின் முன்பாக தொழிலாளர் போல்ஷவிக்குகளின் அறைகூவலுக்கு இணங்க ஒரு எதிர்ப்புப் பேரணியை நடத்தினர். **1917**, பிப்ரவரி **18**ல் பெட்ரோகிராடில் உள்ள புடிலொவ் தொழிற்*

*தொடர்ச்சி **6**ம் பக்கம்*

# பத்திரிகையாளர்கள் மீது நடத்தப்படும் அமலாக்கத் துறையின் திடீர் சோதனைகள்

ஊடகங்களின்மீது தொடர்ந்து மிரட்டி ஒடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுவரும் மத்திய பாஜக அரசாங்கம் டெல்லி காவல்துறை மூலமாக சமீபத்தில் 'நியூஸ்க்ளிக் ஆன்லைன்' செய்தி ஊடகத்தின்மீது ரெய்டு நடத்தியுள்ளது. சீன அரசாங்கத்தோடு நெருக்கமாக உள்ள ஒரு முதலீட்டாளரின் நோக்கங்களை, கேள்வி எழுப்பும் வகையில் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளிவந்தது. அதுதான் இந்த சமீபத்திய ரெய்டுக்குக் காரணமாகத் தெரிகிறது. ஆனால் அந்த செய்தியில் இந்திய அரசாங்கத்திற்கு எதிரான விமர்சனமோ, அவதூறான கருத்துக்களோ இல்லை. ஆனால் நியூஸ்க்ளிக் தலைமை ஆசிரியர் திரு ப்ரபிர் புர்கயஸ்தாவின் ரத்தத்தைப் பார்க்க வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்த மத்திய அரசாங்கத்தின் துதிபாடிகளுக்கு இதுவொரு சாக்காகிவிட்டது.

அதன் பிறகு, டெல்லி காவல்துறையை தன்கையில் வைத்திருப்போர் ஒரு கேவலமான நாடகத்தை அரங்கேற்றினர். தங்கள்மீது என்ன குற்றச்சாட்டு உள்ளதென்றோ, முதல் தகவல் அறிக்கையையோ எதுவுமே தங்களிடம் காட்டவில்லையென்றும் பல மின்னனு சாதனங்களை பறித்துச் சென்றுவிட்டனர் என்றும் நியூஸ்க்ளிக் குற்றம் சாட்டியது. 2021ஆம் ஆண்டு முதலே இந்த செய்தி நிறுவனத்தின்மீது அமலாக்கத்துறை கண்வைத்துள்ளது. ஆனாலும் எந்த வழக்கும் பதியவில்லை. டெல்லி போலீசாரின் குற்றச்சாட்டுகளுக்கு எந்த அடிப்படை ஆதாரமுமில்லை என்று டெல்லி உயர்நீதிமன்றம் கூறிவிட்டது, எனவே, அவர்களைக் கைது செய்யக்கூடாதென்றும் கூறிவிட்டது. இதனால் இந்த செய்தி அந்நிறுவனத்தின் மீது அமலாக்கத்துறையால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. இந்தச் செய்தி நிறுவனத்திற்கு எதிராக வருமான வரித்துறை தாக்கல் செய்த மனுவை கீழமை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. நீதிமன்றத்தில் குட்டுப்பட்டதால் இவர்கள் மீது பழிவாங்க வேண்டுமென்று அடுத்த சந்தர்ப்பத்திற்கு அரசாங்கம் துடித்துக் கொண்டிருந்தது.

பொதுத்தேர்தல்கள் வரவிருக்கின்றன. நமது நாட்டில் பாலாறும் தேனாறும் ஓடுவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. ஆனால் யதார்த்த சூழ்நிலைமையோ நேரெதிராக இருக்கிறது. அரசாங்கத்திற்கு பக்கவாத்தியம் வாசிக்கும் ஊடகங்கள் ஒருபுறம் இருந்தாலும் உண்மை நிலையை ஓரளவாவது எழுதும் ஊடகங்களும் இருக்கின்றன. அது அவர்களுக்கு எரிச்சலைத் தருகிறது. எனவே தங்களுக்கு எதிராக எழுதுபவர்களை மிரட்டி பணியவைக்க எத்தனிக்கின்றனர். அரசாங்கத்தை எதிர்த்தாலும், அல்லது எதிரான கருத்துக்களை எழுதினாலும் என்ன நடக்கும் என்று எச்சரிப்பதற்காகவே இந்த ரெய்டு நடந்துள்ளது.

முதலாளித்துவ ஜனநாயகம் உதித்து வளர்ந்து வந்த காலத்தில் ஊடகமென்பது ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் கருதப்பட்டது. மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அரசியல் நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஆய்வு செய்து உண்மை நிலையை மக்களுக்கு தெரிவிக்கும் ஜனநாயகத்தை கண்காணிக்கும் பாதுகாவலனாக ஊடகம் இருக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. எனவே, அரசாங்கத்தைப் பற்றி ஒரு ஊடகம் விமர்சித்தால், அதனை ஆளும்கட்சி நேர்மறையாக அணுகி தேவைப்பட்டால் தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வர் என்று கருதப்பட்டது.


எனவேதான், முதலாளித்துவ ஜனநாயகத்தை உருவாக்கிய சான்றோர்களில் ஒருவரான வில்லியம் பிளாக்ஸ்டோன் கூறினர்: 'ஒரு சுதந்திர அரசின் தன்மைக்கு பத்திரிக்கை சுதந்திரம் இன்றியமையாதது. ஆனால் எந்த கட்டுப்பாடுகளும் இன்றியோ, பிரசுரிக்கும்போது குற்றவியல் விஷயமென்றால் கண்டனம் வருவதிலிருந்து விடுபட்டோ இருக்க முடியாது. தனக்கு விருப்பமான உணர்வுகளை பொதுமக்கள் முன்பு வைப்பதற்கு ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை உண்டு, அதனைத் தடுப்பது ஊடகத்தின் சுதந்திரத்தை அழிப்பதாகும், ஆனால் முறையற்ற, குறும்புத்தனமான, சட்டவிரோதமானவற்றை பிரசுரித்தால் அதற்கான விளைவை அவர் சந்திக்கவேண்டும்'.

அந்த சுதந்திர நாட்களெல்லாம் மலையேறிவிட்டன. தற்போது தவிர்க்க முடியாத வரலாற்று செயல்முறைப் போக்கினால் முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாகி, அதன் அரசியல் அமைப்பும், முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகமும் சீரழிந்துவிட்டன. மனசாட்சியின் பாதுகாவலர் என்ற ஊடகத்தின் பாத்திரம் உரிக்கப்பட்டு நீண்ட காலமாகிவிட்டது. தற்போது அந்த நான்காவது தூண் சமூகத்தில் நிற்பதற்கே போராடிவருகிறது. ஏனென்றால், இன்று தனது நியதிகளை உயர்த்திப் பிடிப்பதற்கு இந்த நான்காவது தூண் தவறி வருகிறது. ஆளுவோரின் ஆசை வார்த்தைகளுக்கு இணங்கியோ அல்லது அடக்குமுறைக்குப் பயந்தோ ஊடகம் அடங்கினால் குடிமக்கள் அதனிடமிருந்து எதிர்பார்க்கும் உண்மை இல்லாமல் போகின்றது. இன்று பெரும்பாலான பிரதான ஊடகங்கள் ஏகபோக குழுமங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. இன்னும் சொல்லப் போனால் அவர்கள்தான் அந்த ஊடகங்களின் உரிமையாளர்களே. அப்படி இருக்கும்போது முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு எதிரான எந்த செய்தியும் வருமென்று அவற்றிடம் எதிர்பார்க்க முடியாது. அதுமட்டுமல்ல வெகுஜனங்களின் போராட்டங்கள் தொடர்பான செய்திகளையும் இருட்டடிப்பு செய்கின்றனர். உண்மைகளை திரித்து பொய்யான செய்திகளையும் வெளியிடுகின்றனர். இதன்மூலம் மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்துகின்றனர்.

ஆனால் சில ஊடகங்கள் துணிச்சலாக சில நேரங்களில் அரசாங்கத்தையோ அல்லது ஆளும் கட்சித் தலைவரையோ விமர்சித்தால் அதற்காக ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி அவர்கள்மீது அரசாங்கம் பாயலாமா? அப்படிப் பாய்வது அந்த அரசாங்கத்தின் பலமல்ல, மாறாக பயத்தின் அடையாளம் ஆகும். மக்களை பழைய முறையான துப்பாக்கி முனையிலேயே ஆட்சி செய்ய முடியாது என ஆட்சியாளர்கள் நினைக்கின்றனர் என்பதையே இது காட்டுகிறது. அனைத்து ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளும் ஆயுதங்களையும் அதிகாரங்களையும் குவித்து வைத்துள்ளனர். ஆனாலும் மக்களுக்கு உண்மை தெரிந்துவிடுமோ என்று அச்சமடைகின்றனர். எனவே முதலாளித்துவ அரசாங்கங்கள் பொய், பித்தலாட்ட, அரைகுறை உண்மை செய்திகளையே பரப்புகின்றனர். சில ஊடகங்கள் இதற்கு எதிராக நடக்கும்போது அடக்குமுறை என்ற ஆயுதத்தை ஏவுகின்றது.

இணைய சுதந்திரம் குறித்து 'ஃப்ரீடம் ஹவுஸ்' நிறுவனம் சமீபத்தில் நடத்திய ஆய்வில் இந்தியாவுக்கும் 100க்கு 50 மதிப்பெண்தான் தந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது ஜனநாயகம் என்ற போர்வையில் இந்தியா ஒரு முழுஅளவிலான பாசிச சர்வாதிகார நாடாகி விட்டதைக் காட்டுகிறது. 'இணைய சுதந்திரம் 2023: செயற்கை நுண்ணறிவின் ஒடுக்கும் சக்தி' என்ற தலைப்பிடப்பட்ட கட்டுரையில், உலகிலுள்ள பல்வேறு அரசாங்கங்கள் எப்படியெல்லாம் அறிவியல் தொழில்நுட்பத்தின் சமீபத்திய முன்னேறிய வளர்ச்சியை, மக்களின் நிலையை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தாமல் சாமானிய மக்களை வறுமையில் வைத்திருக்கவும் தவறான தகவல்களைப் பரப்பவும் பயன்படுத்துகின்றனர் என்பதை படம்பிடித்துக் காட்டியுள்ளது.

அரசாங்கங்கள் ஊடகங்கள்மீது ஒடுக்கு முறையில் ஈடுபடாமலிருக்க வலியுறுத்தி வலுவான வெகுஜன ஜனநாயக இயக்கங்களை நடத்துவது ஒன்றுதான் உண்மையிலேயே ஜனநாயக எண்ணம் கொண்ட மக்களுக்கும், நான்காவது தூணான ஊடகத்திற்கும் உள்ள ஒரே வழியாகும். மக்களின் வாழ்க்கையை துன்பத்திற்குள்ளாக்கும் சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளைத் தொடர்ந்து வெளிக்கொண்டு வந்து, அதற்கு ஏதுவாக ஒன்றுபட்ட சக்திவாய்ந்த வெகுஜன இயக்கங்களை நடத்தக்கூடிய பொதுமேடையில் ஊடக சகோதரர்கள் உள்ளிட்ட சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரும் ஒன்று திரள்வது இன்றைய காலத்தின் கட்டாயமாகும். கருத்துச் சுதந்திரத்தை அரசாங்கம் தடுப்பதற்கு எதிராக ஊடகங்கள் போராடுவதோடு மட்டுமல்லாமல், மக்களின் உண்மையான நலன்களை உயர்த்திப்பிடிக்கும் சக்திகளின் முயற்சிகளையும் சித்தாந்தத்தையும் துணிச்சலோடு எழுதவேண்டும். எதற்கும் பலியாகமால் உண்மையின் பக்கம் ஊடகங்கள் நிற்க வேண்டும். உண்மையை வெளிக்கொண்டுவரத் தடையாக இருக்கும் எதையும் புறக்கணிக்க வேண்டும். நமது நாட்டின் அனைத்து ஜனநாயக சக்திகளும் இந்தத் தலையாய கடமையை நிறைவேற்ற முன்வர வேண்டும் ■



**புகழ்பெற்ற சுதந்திரப் போராளியும் இலக்கியவாதியுமான முன்ஷி பிரேம்சந் அவர்களின் நினைவு நாளான அக்டோபர் 8 அன்று மாணவர் அமைப்பான ஏஐடிஎஸ்ஓ, தேசிய கல்விக் கொள்கை 2020ஐ எதிர்த்து கிழக்கு மண்டல மாநாட்டை பாட்னாவில் நடத்தியது. அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்க செயலாளர் சௌரவ் கோஷ் தலைமையேற்க, கல்லூரி பேராசிரியர் சங்க முன்னாள் தலைவர் பேரா நந்திதா நரயின் சிறப்புரை ஆற்றினார். பல்வேறு பேராசிரியர்களும் கல்வியாளர்களும் கலந்து கொண்ட இம் மாநாட்டில், மே.வங்கம், பிஹார், ஜார்கண்ட், உபி ஆகிய மாநிலங்களிலிருந்து 1000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். தேசிய கல்வி கொள்கைக்கு எதிராக ஏராளமான செயல்வீரர்களை நியமித்து பரந்துபட்ட தீவிர இயக்கத்தை நடத்த அம் மாநாடு அறைகூவல்! ■**



**மேற்குவங்க மின்வாரியம் குறைந்த பட்ச மின் கட்டணத்தை உயர்த்தியதையும் ஸ்மார்ட் மீட்டர் பொருத்துவதையும் எதிர்த்து அனைத்து வங்க மின் நுகர்வோர் சங்கம் கொல்கத்தா வித்யூத் பவன் முன்பு ஊர்வலம் ■**

## மாபெரும் நவம்பர் புரட்சி நீடூழி வாழ்க

# ஏகாதிபத்தியமும் பாட்டாளி வர்க்கப் புரட்சியுமான இக்காலகட்டத்தில்தான் ஒரு தனி முதலாளித்துவ நாட்டில் சோசலிசத்தை வெற்றிபெறச் செய்யமுடியுமென லெனின் தெளிவாகக் குறிப்பிட்டார்

*4ம் பக்கத் தொடர்ச்சி*

சாலையில் வேலைநிறுத்தம் ஒன்று வெடித்துக் கிளம்பியது. பிப்ரவரி 22ஆம் நாள், பெரும்பாலான தொழிற்சாலைகள் மூடப்பட்டன. பிப்ரவரி 23ஆம் நாள், (புதிய நாட் காட்டியின் பிரகாரம் மார்ச் 8ம் நாள்) சர்வதேசிய பெண்கள் தினத்தன்று பெண் தொழிலாளர்கள் பட்டினி, போர் மற்றும் ஜார் ஆட்சிக்கெதிராக தெருக்களில் இறங்கிப் போராடினர். பிப்ரவரி 26ஆம் நாள் ஆர்ப்பாட்டங் களும் வேலைநிறுத்தங்களும் வெகுஜன கிளர்ச்சிகளாக உருமாறின. தொழிலாளர்கள், போலீஸ் மற்றும் ராணுவ வீரர்களிடமிருந்து ஆயுதங்களை பறித்து தாங்களை ஆயுதபாணி யாக்கிக் கொண்டனர். அடுத்த நாள் பிப்ரவரி 27ல் பெட்ரோகிராடில் ராணுவ வீரர்கள் தொழிலாளர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்த மறுத்துவிட்டனர். அதிருப்தி கொண்ட ராணுவ வீரர்கள் மிகப்பெரும் எண்ணிக்கையில் புரட்சியாளர்களுடன் இணைந்தனர். காலையில் 10,000மாக இருந்த அவர்களின் எண்ணிக்கை மாலையில் 60,000 என அதிகரித்தது. பின்னர் புரட்சிகரத் தொழிலாளர்களும் ராணுவ வீரர்களும் ஜாரின் அமைச்சர்களையும் தளபதிகளையும் கைது செய்யத் துவங்கினர், விடுவிக்கப்பட்ட அரசியல் கைதிகள் யாவரும் புரட்சிகர யுத்தத்தில் இணைந்தனர். ஜாரின் படைகள் தொழிலாளர்களின் பக்கம் சேர்ந்துகொண்டதால் ஜார் ஆட்சியின் வீழ்ச்சி தவிர்க்கவியலாததாக ஆக்கப்பட்டது. இவ்வாறாக பிப்ரவரி மாதத்தில் பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சி வெற்றி அடைந்தது; இவ்வாறாகத்தான் ஜார் ஆட்சி வேரறுக்கப்பட்டது. இங்கே புரட்சிகர முன்னணிப் படையில் தொழிலாளர்கள் உள்ளடங்கி யிருந்ததினால், பிப்ரவரி பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியானது வெற்றிகண்டது. ராணுவ வீரர்கள் போல் உடைதரித்து, 'அமைதி', 'உணவு' மற்றும் 'விடுதலை' எனும் கோரிக்கைகளுடன் அவர்கள் லட்சக்கணக்கான விவசாயிகளின் புரட்சியை வழிநடத்தினர்.

இச்சூழ்நிலையில், மக்கள் போராட்டக் கமிட்டிகளான 'சோவியத்துக்கள்' என்பது மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. ஜார் ஆட்சிக்கெதிராக கொழுந்து விட்டு எரிந்துகொண்டிருந்த அன்றைய போராட்ட நாட்களில், பாடுபடும் ரஷ்ய மக்கள் ஒரு புதிய போராட்டக் கருவியான– தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவித்துக்களை உருவாக்கும் முயற்சியினை மேற்கொண்டனர். ஆலைகள் மற்றும் தொழிற்சாலைகள் அனைத்திலிருந்தும் வந்த பிரதிநிதிகள் அடங்கிய அத்தகைய தொழிலாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள், தொழிலாளர்களின் ஒருவகையான சொந்த வெகுஜன அமைப்பாக, இதற்கு முன்னர் உலகத்தில் கண்டிராத வகையில் உருவானது. 1917ல் அத்தகைய சோவியத்துக்கள் படைவீரர் களையும் இணைத்துக்கொண்டுவிட்டது. இத்தகைய சோவியத்துக்கள் ஆற்றிய பங்குதான் புரட்சியின் வெற்றிக்கு பிரதான காரணியாக அமைந்தது.

பிப்ரவரி புரட்சியின்போது, போல்ஷவிக்குகள் வெகுஜனங்களின் போராட்டங்களை தெருக்களில் நேரடியாகத் தலைமையேற்று நடத்திக் கொண்டிருந்த சமயத்தில், மென்ஷவிக்குகளும் சோசலிஸ்ட்–புரட்சியாளர்களும் சோவித்துக்களில் பதவிகளைப் பிடித்து அங்கு தங்களின் பெரும்பான்மையை நிறுவிக்கொண்டனர். ஒருபுறம் சோவியத்துகளின் தலைமையில் அதிகாரம் இருந்தாலும் மற்றொருபுறம் மென்ஷவிக்குகளும் பிறரும் ஒரு ரகசிய ஒப்பந்தத்தின் மூலம் பிப்ரவரி 27 அன்று முதலாளித்துவ வர்க்கத்திடம் அதிகாரத்தை ஒப்படைத்தனர். இவ்வாறாக இரட்டை ஆட்சி சில மாதங்கள் நீடித்தன. பிறகு மென்ஷவிக்குகளின் சமரசவாதத்தால் முதலாளிகளின் ஆட்சி உறுதியடையத்துவங்கியது.

### ஏப்ரல் ஆய்வறிக்கை

போல்ஷவிக் கட்சியிலும் வேறுபாடுகள் தோன்றின. சிலர் தற்காலிக அரசாங்கத்திற்கு நிபந்தனையுடன் கூடிய ஆதரவு தருவது பற்றிப் பேச ஆரம்பித்தனர். இறுதியாக, ஏப்ரல் மாதம் 3ஆம் தேதி லெனின் அவர்கள் அவரது நீண்ட கால நாடுகடத்தலுக்குப் பின்னர் இரஷ்யாவிற்குத் திரும்பி வந்தார். பெட்ரோகிராடின் ரயில் நிலையத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் மற்றும் படைவீரர்கள் முன்பாக, ஆயுதம் தாங்கிய வாகனத்திலிருந்து அவர் ஆற்றிய உரையில், சோசலிசப் புரட்சியின் வெற்றிக்கான போராட்டத்திற்கு முன்வருமாறு அறைகூவல் விடுத்தார்.

லெனின் இரஷ்யாவுக்கு வந்தவுடன், புரட்சியைக் கட்டியமைக்கும் கடமையினுள் இரண்டறக் கலந்து விட்டார். முதல் நாளில் போல்ஷவிக்குகளின் கூட்டத்தில், போர் மற்றும் புரட்சி குறித்து ஒரு அறிக்கையை வழங்கினார், அதன் பின், போல்ஷவிக்குகள் மற்றும் மென்ஷவிக்குகள் கலந்துகொண்ட இரண்டாவது கூட்டத்தில் அதே அறிக்கையை மீண்டும் முன்வைத்தார். உண்மையில், அந்த அறிக்கை அவரது பிரசித்திபெற்ற ஏப்ரல் ஆய்வறிக்கையை உள்ளடக்கியதாகும். சோசலிசப் புரட்சிக்கும் அதனை பருண்மையாக நிறைவேற்றுவதற்கும் ஏப்ரல் ஆய்வறிக்கை அதி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அந்த ஆய்வறிக்கையானது சோசலிசப் புரட்சியை நோக்கிய மாற்றத்தின் துவக்ககால நடவடிக்கைகளுக்கான ஒரு பருண்மையான, கருத்தியல் ரீதியான அடித்தளம் கொண்ட போராட்டத் திட்டத்தினை வழங்கியது. ஏப்ரல் அறிக்கை தற்காலிக முதலாளித்துவ அரசாங்கத்திற்கு ஆதரவு தரக்கூடாது என திட்டவட்டமாகவும் அதை தகர்க்க தொழிலாளர் களும் விவசாயிகளும் மக்களும் ஒன்றுசேர வேண்டும் என்றும் பறைசாற்றியது. மார்ச் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை ரகசியமாக நடைபெற்ற போல்ஷவிக் கட்சியின் மூன்றாம் மாநாட்டில் பூர்ஷ்வா வர்க்கத்திற்கெதிரான இறுதி யுத்தத்திற்காக தொழிலாளர்கள், படைவீரர்கள் மற்றும் விவசாயிகள் ஆயுதங்களுடன் ஒன்றுதிரட்டிக் கொள்ள வேண்டுமென்ற அறைகூவல் விடுக்கப்பட்டது.

### உலகை உலுக்கிய அந்த நாட்கள்

அக்டோபர் 16ஆம் தேதியன்று, மத்தியக் கமிட்டி கட்சியின் ஒரு மையக் கரு குழுவை (Core) தேர்ந்தெடுத்து, நெருங்கி வந்துகொண்டிருக்கும் எழுச்சிக்கு தோழர் ஸ்டாலினை தலைவராக்கியது. சோவியத் புரட்சி ராணுவக் கமிட்டிக்கு தலைமையாக செயல்பட்டதுடன் ஒட்டுமொத்த புரட்சிகர எழுச்சியும் கட்சியின் இத்தகைய மையக்கருவால்தான் வழிநடத்தப்பட்டது. அக்டோபர் 19ஆம் நாளன்று, தற்காலிக முதலாளித்துவ அரசாங்கமானது, யுத்தக் களத்திலிருந்து படைவீரர்களை வாபஸ் பெற்றதுடன் அவர்களை பெட்ரோகிராடில் நிறுத்தியது. பெட்ரோகிராட் வீதிகளில் அவர்கள் ரோந்து சுற்றி வந்தனர். ஸ்மோல்னி என்ற பெண்கள் பள்ளியில் போல்ஷவிக் கட்சியின் மத்தியக் கமிட்டி தலைமையகத்தைத் தாக்கி, அதனைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. பெட்ரோகிராட் சோவியத்தின் ஒரு கூட்டத்தில், டிராட்ஸ்கி ஆயுத எழுச்சி துவங்கும் தேதியை வெளியிட்டுவிட்டார். ஆனால் மத்தியக் கமிட்டியானது, திட்டமிட்டிருந்த தேதிக்கு முன்பாகவே ஆயுத எழுச்சியைத் துவங்கிட முடிவு செய்தது.

அக்டோபர் 24ஆம் நாள், (புதிய நாட்காட்டியின் படி நவம்பர் 6) அதிகாலையில் கெரென்ஸ்கி அரசாங்கம், கட்சியின் மத்திய ஏடான ரபோச்சு புட்–ஐ (தொழிலாளர்களின் பாதை) மூடிட, பதிப்பாசிரியர் அலுவலகம் மற்றும் அச்சகத்தின் முன்பாக ஆயுதம் தாங்கிய கவச வாகனங்களை நிறுத்தித் தாக்க ஆரம்பித்தது. ஆனால், மாபெரும் ஸ்டாலின் அவர்களது அறிவுறுத்தலின்படி, செம்படையினரும் புரட்சிப்படையினரும் அந்தக் கவச வாகனங்களை அப்புறப்படுத்தினர். கட்சியின் மையக் கருவானது கேட்டுக்கொண்ட படி, அனைத்து புரட்சி ராணுவக் குழுக்களும் செம்படையினரும் கட்சியின் மத்தியக் கமிட்டி தலைமையகமான ஸ்மோல்னியை நோக்கி விரைந்தனர். எழுச்சி துவங்கிய அன்றிரவே மாபெரும் லெனின் அவர்கள் ஸ்மோல்னி சென்றடைந்து எழுச்சிக்கான தலைமையை வழங்கினார். அன்றிரவு முழுவதும் புரட்சிப் படையினர் ஸ்மோல்னியில் ஒன்றுகூடினார்கள். பனிக்கால அரண்மனையில் தற்காலிக அரசாங்கத்தின் தலைவர்கள் அடைக்கலம் புகுந்திருந்தனர். அதனைச் சூழ்ந்து தாக்க போல்ஷவிக்குகள் அனுப்பப்பட்டனர். அக்டோபர் 25ஆம் நாள், (புதிய நாட்காட்டியின்படி நவம்பர் 7) ரயில் நிலையம், அஞ்சலகம், தந்தியகம், அமைச்சர்களது அலுவலகம் மற்றும் அரசு வங்கி ஆகியவற்றை புரட்சிகர சக்திகள் கைப்பற்றின. தற்காலிக பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. ஸ்மோல்னி என்ற இடம், புரட்சிக்கான தலைமையகமாக மாறியது. அதே நேரத்தில், கூடவே செம்படைப் பிரிவினரும் பெட்ரோகிராட் தொழிலாளர்களும் ராணுவத்தின் புரட்சிப்படைப் பிரிவுகளுடன் சேர்ந்துகொண்டு, போல்ஷவிக் கட்சியின் தலைமையிலான மிகப்போற்றத்தக்க, வீரம் செறிந்த யுத்தத்தைத் தொடுத்தது. கடற்படையும்கூட, சற்றும் பின்தங்கவில்லை.

ஆரோரா என்ற போர்க்கப்பல், பனிக்கால அரண்மனையின் மீது சரமாரியாகச் சுட்டது. அதே அக்டோபர் 25ஆம் நாள், தற்காலிக பூர்ஷ்வா அரசாங்கத்தைத் தூக்கியெறிந்துவிட்டு அரசு அதிகாரத்தை சோவியத்துக்கள் கைப்பற்றிவிட்டனர் என்பதை பரந்த அளவில் மக்களிடம் துண்டுப்பிரசுரங்களை வினியோகித்து அறிவித்தனர். தலைநகரத்தின் அதிகாரம், பெட்ரோகிராட் சோவியத்துக்களின் கைகளுக்கு வந்துவிட்டது.

போல்ஷவிக் கட்சியின் தலைமையில் உழைக்கும் வர்க்கமானது, ஏழை விவசாயிகள் கூட்டணியுடனும் படைவீரகள் மற்றும் கடற்படையினரின் ஆதரவுடனும் பூர்ஷ்வாக்களின் அதிகாரத்தைத் தூக்கியெறிந்து, சோவியத்துக் களின் அதிகாரத்தை நிறுவி, இரஷ்யாவில் சோசலிச சோவியத் அரசு எனும் ஒரு புதிய குணாம்சத்துடனான அரசை நிறுவியது. நிலப்பிரபுக்களின் உரிமை அகற்றப்பட்டு அவர்களின் நிலங்களனைத்தும் ஏழை விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டது. நிலங்களனைத்தும் தேசியமயமாக்கப்பட்டது. மேலும் அத்துடன், வங்கிகள், ரயில்வே, அயல்நாட்டு வணிகம், வியாபாரக் கப்பல்கள் இன்னும் பலவற்றுடன் அபகரிப்பாளர்கான முதலளித்துவவாதிகள் வசமிருந்த அனைத்துப் பிரிவு பெரும் நிறுவனங்கள் யாவும் தேசியமய மாக்கப்பட்டு, அவைகள் அனைவருக்கும் பொதுவானதாக, முழுவதும் மக்களின் சொத்துக்களாக மாற்றப்பட்டன. சோவியத் ரஷ்யா என சோசலிச அரசானவுடன் போர் நிறுத்தப்பட்டு, இறுதியில் அமைதியை அடையப்பெற்றது.

நவம்பர் புரட்சியானது, முதலாளித்துவத்தை நொறுக்கித்தள்ளி விட்டது. அது இரஷ்யாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவி, இப்பரந்துபட்ட நாட்டின் ஆட்சியை உழைக்கும் வர்க்கத்திடம் ஒப்படைத்து, உழைக்கும் வர்க்கத்தை ஆளும் வர்க்கமாக மாற்றியது. இவ்வாறாக, அம்மாபெரும் புரட்சியானது ஒரு புதிய சகாப்தத்தை – சோசலிசப் புரட்சியின் வெற்றிச் சகாப்தத்தை துவக்கி இன்றும் சோசலிசப் புரட்சியே மனிதயின விடுதலைக்கும் போர் இல்லா உலகிற்கும் வழி என்பதை காட்டிக் கொண்டிருக்கின்றது ■

# ஆவுடையார்கோயில் வட்டார அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் (ஏஐகேகேஎம்எஸ்) வெற்றிகரமான இரண்டாவது மாநாடு!

மத்திய அரசாங்கமானது 2022ஆம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பாக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தது. ஆனால் அப்படியேதும் நடக்கவில்லை, நடப்பது, அதற்கு நேர்மாறானது! உண்மையில், இக்காலகட்டத்தில்தான் விவசாயச் செலவு இருமடங்காக அதிகரித்துள்ளது. விவசாய விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை (எம்எஸ்பி) தருவதாக வாக்குறுதி அளித்த பின்பும் அரசாங்கம் தனது நிலைப்பாட்டிலிருந்து அப்பட்டமாகப் பின்வாங்கியுள்ளது. இது தவிர, உரங்கள், விதைகள் மற்றும் பிற விவசாய இடு பொருட்கள் ஏற்கெனவே தனியார் நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் சென்றுவிட்டன. அவற்றின் விலையை தொடர்ந்து பல மடங்கு உயர்த்தி, விவசாயிகளை கட்டுப்பாடில்லாமல் தனியார் நிறுவனங்கள் கொள்ளையடித்துக் கொண்டிருக்கின்றன.

இச்சூழ்நிலையில் புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோயில் வட்டாரத்தில் 2022ஆம் ஆண்டில் மழை பொய்த்து, வறட்சியால் பாதிக்கப் பட்டு, விளைந்தும் விளையாமல்போன நெற்பயிர் களை ஆடுமாடுகளை வைத்து மேயவிடும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர். இதற்காக இப்பகுதி விவசாயிகள் கிராமம் கிராமமாக வாகனப் பிரச்சாரம், தர்ணா போராட்டம் மற்றும் சம்மந்தப் பட்ட அதிகாரிகளிடம் முறையிடுதல் உள்ளிட்ட துறை ரீதியிலான நடவடிக்கைகளை மேற் கொண்டனர். ஆயினும், வறட்சி நிவாரணமும் பயிர்க் காப்பீட்டுத் தொகையும் சரிவரக்கிடைக்கவில்லை.





மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் மத்திய, மாநிலத் தலைவர்கள், மாநாட்டில் கலந்துகொண்ட விவசாய விவசாயத் தொழிலாளர்கள்

இத்தகைய சூழ்நிலையில், அகில இந்திய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் சங்கமான ஏஐகேகேஎம்எஸ் (AIKKMS) எதிர்கால திட்டங்களை வகுத்தெடுக்க ஆவுடையார்கோயில் வட்டார இரண்டாவது மாநாட்டை ஆவுடையார் கோயில் தாலுகா தீயத்தூரில் அக்டோபர் 13, 2023 அன்று நடத்தியது. மாநாட்டுக்கு, முந்தைய வட்டாரச் செயலாளர் தோழர் கோவிந்தராசு தலைமை வகித்தார். முந்தைய வட்டாரக் கமிட்டி உறுப்பினர் தோழர் எஸ் சாத்தையா முன்னிலை வகித்தார். ஏஐகேகேஎம்எஸ் அகில இந்திய செயற்குழு உறுப்பினர் தோழர் நாகம்மாள் அவர்கள் சிறப்புரையாற்றினார். மேலும் ஏஐகேகேஎம்எஸ் அகில இந்திய கவுன்சில் உறுப்பினர்களான தோழர்கள் சந்திரபோஸ், எஸ் சுருளியாண்டவர் உள்ளிட்ட வட்டார ஏஐகேகேஎம்எஸ் செயல் பாட்டாளர்கள் உரையாற்றினார்கள். அதன்பின், தோழர் எஸ் சாத்தையா அவர்களை தலைவராகவும் தோழர் கணேசன் அவர்களை செயலாளராகவும் 9 பேர் கொண்ட புதிய வட்டாரக்கமிட்டி ஒன்றும் அமைக்கப்பட்டது.

மேலும், ஆவுடையார்கோயில் வட்டார முக்கிய கோரிக்கைகளான 1. வைகை குண்டாறு வாய்க்கால் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். 2. பயிர்க்காப்பீட்டுத்தொகையை முறையாகக் கணக்கிட்டு விடுபட்ட கிராம விவசாயிகளுக்கு உடனடியாக பட்டுவாடா செய்ய வேண்டும் 3. நடமாடும் கால்நடை மருத்துவ முகாம்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் 4. வறட்சி மற்றும் வெள்ள நிவாரணம் வழங்கப்பட்ட அனைத்து விவசாயி களின் கூட்டுறவு சங்கத் கடன்களையும் ரத்து செய்யவேண்டும் உள்ளிட்ட 7 கோரிக்கைகள் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன. மாநாட்டில் பெண்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான விவசாயிகள் கலந்துகொண்டனர் ■

# டில்லி ஜந்தர் மந்தரில் ஏஐகேகேஎம்எஸ் தர்ணா

விவசாயிகள் விரோத கொள்கைகளை மத்திய அரசாங்கம் கைவிட வேண்டும், வேளாண் விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்ய வேண்டும், வேளாண் விளை பொருட்களை அரசாங்கமே கொள்முதல் செய்து விநியோகிக்க வேண்டும், மின்சார திருத்த சட்ட மசோதாவை கைவிட வேண்டும், கிராமப்புற ஏழைகளுக்கு ஆண்டு முழுவதும் வேலை வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நவம்பர் 1 2023 அன்று டில்லி ஜந்தர் மந்தரில் ஏஐகேகேஎம்எஸ் சார்பில் நடைபெற்ற தர்ணா போராட்டம் ■







டில்லி ஜந்தர் மந்தரில் ஏஐகேகேஎம்எஸ் சார்பில் நடைபெற்ற தர்ணா போராட்டம்

# நிரந்தர வேலை கேட்டும், பணிநிரந்தரம் செய்யக் கோரியும் தமிழகத்தில் நடைபெறும் போராட்டங்கள்

2021 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலின் போது திமுக, நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அரசு காலிப்பணியிடங்களை நிரப்புவோம், பகுதிநேர ஆசிரியர்களைப் பணிநிரந்தரம் செய்வோம், செவிலியர்களைப் பணிநிரந்தரம் செய்வோம், இந்து அறநிலைத் துறையில் காலிப்பணியிடங்களை நிரப்புவோம், புதியதாக வருடத்திற்கு 2 இலட்சம் இளைஞர்களுக்கு வேலை தருவோம், தமிழ்நாட்டில் முதல்தலைமுறை பட்டம்பெற்ற ஒருவருக்கு அரசு வேலை முன்னுரிமை வழங்கப்படும் என்று வார்த்தைகளை அள்ளி வீசியது நாம் அனைவருக்கும் நினைவுயிருக்கும்.

இன்று சூழ்நிலை தலைகீழாக மாறியுள்ளது. ஆட்சிக்குவந்தவுடன் செவிலியர்கள் மட்டும் 1400 பேரை பணிநிரந்தரம் செய்தது. போலீஸ் தேவைக்கு மேல் ஆட்கள் எடுத்து உள்ளது. மற்ற அனைத்துத் துறைகளும் என்றும் போல் உள்ளது. மருத்துவர்கள், செவிலியர்கள், ஆசிரியர்கள், நூலகம், மின்சாரப் பணியாளர்கள், தேர்வு எழுதிக் காத்திருக்கும் இளைஞர்கள் அனைவரும் தங்களது கோரிக்கைகளை முன்வைத்து போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆசிரியர் தகுதித் தேர்வு எழுதி 10 வருடங்களாக எங்களை ஆசிரியர் பணிக்கு எடுக்கவில்லை என்று தேர்வு எழுதி காத்திருக்கும் ஆசிரியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் ஓராசிரியர் பள்ளி, இரு ஆசிரியர்கள் என்று நூற்றுக்கணக்கான பள்ளிகள் இருக்கின்றன. முழுமையாக ஆசிரியர்களை அமர்த்தி முழுமையான கல்வியைத் தர மாநில அரசாங்கம் விரும்பவில்லை. என்இபி2020 தேசிய கல்விக் கொள்கை 2020 முழுமையாக நடைமுறைப்படுத்திக் கொண்டு பெயர் மட்டும் திராவிட கல்விக் கொள்கை என்ற பெயரை மட்டும் வைத்துக்கொண்டு வீடுத் தேடி வரும் கல்வி, நம்ம ஸ்கூல் பவுண்டேசன், இதே போல் கல்லூரிகளில் நான் முதல்வன் போன்ற திட்டங்கள் கல்வி விரோதச் செயல்பாடுகளை மாநில அரசாங்கம் செய்து வருகிறது. பகுதிநேர ஆசிரியர்கள் பணிநிரந்தரம் கேட்டும் சமவேலைக்கு சம ஊதியம் கேட்டும் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

மத்திய அரசாங்கம் கொண்டு வந்துயிருக்கும் மின்சார சட்ட திருத்த மசோதா 2022ஐ முழுமையாகப் பயன்படுத்தி மின்சாரத்துறையில் முழுமையாகத் தனியார்மயப்படுத்துவதற்கு அனைத்துச் செயல் பாடுகளையும் தமிழக அரசாங்கம் செய்து வருகிறது. தனியாரிடம் மின்சாரம் கொள்முதல் செய்தல், தனியார் பங்கேற்புடன் பொதுத்துறை நிறுவனங் களை செயல்படுதல், ஸ்மார்ட் மீட்டர் பொருத்துதல், வருடாவருடம் மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது, அடுக்குமாடி குடியிருப்புக்கு வணிக கட்டணத்தைச் செயல்படுத்துவது. மின்சாரத்துறையில் காலிப் பணியிடங்களை பூர்த்திச் செய்யாமல் தினக்கூலிக்கு ஆட்கள் அமர்த்துவது, பணி ஓய்வுபெற்றவர்களை குறைந்த ஊதியத்தில் பணியில் அமர்த்துவது. மின்துறையில் தேர்வு எழுதி கேங்மேன் பணிக்கு ஆட்கள் எடுக்காமல் இருப்பது. இதுபோன்ற மக்கள் விரோத செயல்பாடுகளை தமிழக அரசாங்கம் மின்துறையில் செயல்படுத்தி வருகிறது.

செவிலியர்கள் தேர்வு எழுதி பணிக்கு சேர்ந்தவர்கள் பணிநிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களும் பணிநிரந்தரத்திற்காக போராடிக் கொண்டு இருக்கிறார்கள். இதுபோன்று நூலகம், விளையாட்டு, இந்து அறநிலைத்துறை, போக்குவரத்து, இதுபோன்ற பல்வேறு துறைகளில் தமிழக அரசாங்கத்தின் செயல்பாடு இவ்வாறுதான் உள்ளது. ஊராட்சிகளில் சுத்தம் செய்வதற்கு, தெருவிளக்கு போடுவதற்கு, தண்ணீர் விடுவதற்கு ஊராட்சிகளிலும் நிரந்தர பணியாட்கள் இல்லை. எல்லாம் கான்ராக்ட் முறையில் செயல்படுகிறது.

படித்து முடித்துவிட்டு வேலைக்காக காத்திருக்கும் இளைஞர்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. எந்தவொரு துறையிலும் ஆயிரக்கணக்கான காலிப்பணி இடங்களுக்கு இலட்சக்கணக்கானவர்கள் தேர்வு எழுதுகின்றனர். கிராமங்கள் முதல் நகரம் வரை படித்து முடித்துவிட்டு வேலைக்காக காத்திருக்கும் இளைஞர்களின் கனவுகளை அரசாங்கம் திட்டமிட்டு அவர்களின் வாழ்வை சிதைத்து வருகின்றது.

தேர்வு எழுதிக் காத்துக்கொண்டு இருக்கும் இளைஞர்களும், பணிநிரந்தரம் செய்யவேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கும் ஊழியர்களும், படித்து முடித்து விட்டு வேலைக்காக காத்துக் கொண்டியிருக்கும் இளைஞர்களும் ஒன்று சேர்ந்து இளைஞர்களுடைய கோரிக்கைகளுக்காக தொடர்ந்து போராடினால் அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கவைக்கமுடியும் ■

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication: First week of Every Month

பாட்டாளி சிந்தனை
PAATTALI CHINTANAI

Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# ஐக்கிய விவசாயிகள் முன்னணியும் தொழிற்சங்கங்களும் இணைந்து நாடு முழுவதும் காத்திருப்புப் போராட்டம்

## நவம்பர் 26–28 தமிழக ஆளுநர் மாளிகை முன்பான மூன்று நாள் தொடர் காத்திருப்புப் போராட்டத்தை வெற்றிபெறச் செய்வீர்!

ஐக்கிய விவசாயிகள் முன்னணி மற்றும் மத்தியத் தொழிற்சங்கங்கள், பிற கூட்டமைப்புகளின் சார்பில் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் 24, ஆகஸ்ட் 2023 அன்று புதுடில்லியில் ஒன்றுகூடி அக்டோபர்3,2023 அன்று கருப்பு பேட்ஜ் அணிந்து நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது, நியூஸ் கிளிக் மீதான தவறான முதல் தகவல் அறிக்கை (எஃப் ஐ ஆர்) திரும்பப்பப்பெறப்பட வேண்டும், ஊடகவியலாளர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி, 2023 நவம்பர் 6 அன்று அகில இந்திய எதிர்ப்பு தினம் கடைபிடிக்கப்பட்டு அன்றைய நாளில் தவறான எஃப்ஐஆர் நகல்களை எரிக்க வேண்டும் மற்றும் 2023 நவம்பர் 26 முதல் 28 வரையில் மாநில ஆளுநர்கள் மாளிகை முன்பாக 3 நாட்கள் இரவு பகலாக அமர்ந்து காத்திருப்புப் போராட்டங்கள் நடத்துவது உள்ளிட்ட பல்வேறுகட்ட போராட்டங்களை அறிவித்தனர்.

இவர்களது பிரதான கோரிக்கைகள் 3 ஆக்டோபர் 2021 அன்று உள்துறை இணை அமைச்சர் மற்றும் அவரது மகனான ஆஷிஷ் மிஸ்ரா டேனி ஆகியோர் திட்டமிட்டு லக்கிம்பூர்கேறியில் 4 விவசாயிகளை மற்றும் 1 பத்திரிகையாளரை காரை ஏற்றி படுகொலை செய்ததை கண்டித்து, உள்துறை இணை அமைச்சர் பதவி நீக்கம் செய்து விசாரணை செய்யப்பட வேண்டும், பொய்வழக்கு போடப்பட்ட அனைத்தையும் ரத்துசெய்ய வேண்டும் என்பனவாகும்.

முதற்கட்ட போராட்டமாக ஆக்டோபர் 3, 2023 அன்று நாடு முழுவதும் கருப்பு பேட்ஜ் அணிந்து ஆர்ப்பாட்டங்களை வெற்றிகரமாக நடத்திய நிலையில், 2023 நவம்பர் 6 அன்று அகில இந்திய எதிர்ப்பு தினம் கடைபிடிக்கப்பட்டு அன்றைய நாளில் தவறான எஃப்ஐஆர் நகல்களை எரிக்கும் போராட்டம் நடைபெறும். வருகின்ற 2023 நவம்பர் 26 முதல் 28 வரையில் மாநில ஆளுநர் மாளிகை முன்பாக 3 நாட்கள் இரவு பகலாக அமர்ந்து காத்திருப்புப் போராட்டமும் நடைபெறுகிறது..

அதனை வெற்றிகரமாக்கும் முகமாக எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)ன் விவசாயிகள் அமைப்பான அகில இந்திய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் சங்கமும் (ஏஐகேகேஎம்எஸ்) கட்சியின் தொழிற்சங்க அமைப்பான ஏஐயுடியுசியும் முனைப்புடன் மக்களைத் திரட்டி வருகிறது. மாநிலம் முழுவதுமுள்ள தொழிலாளர்கள், விவசாயிகள் திரளாகக் கலந்துகொண்டு போராட்டத்தை வெற்றிகரமாக்கிடவேண்டும் என இவ்விரு அமைப்புகளின் சார்பில் அறைகூவல் விடுக்கிறோம்! ■

# காஸா மீது யுத்தவெறி இஸ்ரேல் . . .

1ம் பக்கத் தொடர்ச்சி

விதித்ததோடு காஸா மீது வான்வெளித்தாக்குதலை தொடங்கி இஸ்ரேல் குண்டுமழை பொழிந்து கட்டிடங்களை தரைமட்டமாக்கி நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுக்கமக்களைக் கொன்று குவித்துள்ளது. இந்த காட்டுமிராண்டித்தனம் ஹிட்லரின் கொடுமைகளைவிடக் கொடுமையாகும்.

2007ம் ஆண்டுமுதலே பாலஸ்தீன மக்கள் மீது ராணுவத் தாக்குதல் தொடுத்து திடீர் போர்களை நடத்தி ஈவிரக்கமின்றி ஆயிரக்கணக்கான பொதுமக்களைக் கொன்றுள்ளனர். ஒடுக்கப்பட்ட பாலஸ்தீன மக்களின் நியாயமான விடுதலைப் போராட்டத்தை ஆயுத பலத்தின் மூலமாக இஸ்ரேல் ஒடுக்கிவருகிறது. கிழக்கு ஜெருசலேமை இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளதை எந்த ஒரு சர்வதேச ஒப்பந்தமும் ஏற்கவில்லை என்றபோதிலும் இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை பாவித்து 2017ல் அன்றைய யுஎஸ் அதிபர் டொனால்டு டிரம்ப் டெல் அவிவிலுள்ள இஸ்ரேலுக்கான அமெரிக்க தூதரகத்தை ஜெருசலேமிற்கு மாற்றுகிறோம் என்று தன்னிச்சையாக அறிவித்தார்.

போர்வெறி பிடித்த இஸ்ரேல் அரசாங்கத்திற்கும் அதன் ஏகாதிபத்திய அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்திய சக்திகளுக்கும் கடும் எதிர்ப்பை பதிவு செய்து, போராடும் பாலஸ்தீன மக்களுக்கு துணைநிற்குமாறும்,வான்வெளித்தாக்குதலை இஸ்ரேல் நிறுத்தவும், பாலஸ்தீனத்தின் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையை நீக்கி அங்கிருந்து வெளியேற வலியுறுத்துமாறும் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் அமைதியை நேசிக்கும் அனைவரையும் அறைகூவி அழைக்கின்றோம் ■



சென்னை



புதுதில்லி


புதுச்சேரி

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம்: பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம்: ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, **ஆசிரியர்: ஆ ரெங்கசாமி**

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor: A Rengasamy**
Tel : 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**